# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

**2014 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 01 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி**

(2014. 08. 04 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)

## மாநகர சபைகள் (திருத்தம்)

**(252 ஆம் அத்தியாயமான) மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தினைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் அவர்களால்
பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 3.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

## சட்டப்பயன் பற்றிய கூற்று

***வாசகம் 2 :*** *இவ்வாசகம் (252 ஆம் அத்தியாயமான) மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 215அ என்னும் பிரிவினைத் திருத்துகின்றதென்பதுடன், அப்பிரிவின் காப்புவாசகத்தின் நீக்கத்தின் மூலம் அத்தகைய நீக்கத்திற்கான சட்டப்பயனானது மேலதிக கவனத்திற்காக மாநகர சபைக்கான வரவு-செலவுத் திட்டம் ஒன்றை அல்லது குறைநிரப்பு வரவு-செலவுத் திட்டம் ஒன்றை மீளச் சமர்ப்பிக்கும் போது மாநகர சபையினால் பின்பற்றப்பட்ட நடவடிக்கை முறையை மீளக் கடைபிடிப்பதற்கானதாகும்.*

*ச.வ.ஓ. 3 /2014*

## *(252 ஆம் அத்தியாயமான) மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்*

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.*

*1.* இச்சட்டம், 2014 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, மாநகர சபைகள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை மூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

*(252 ஆம் அத்தியாயமான) மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 215அ என்னும் பிரிவினைத் திருத்துதல்.*

*2.* 2012 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உள்ளூர் அதிகாரசபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான (252 ஆம் அத்தியாயமான) மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 215அ என்னும் பிரிவானது அப்பிரிவிற்கான காப்புவாசகத்தை நீக்குவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

*3.* இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்